புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தொல்மரபும் வள்ளுவமும் காட்டும் பொருட்பெண்டிர்

*முனைவர் செ. மார்கண்டன்,*
*இணைப் பேராசிரியர்,*
*வேல்ஸ் பல்கலைக்கழகம், சென்னை-117 .*

*ஆய்வுச் சுருக்கம்*

*இயற்கை நெறி வாழ்வியலை சில திருத்தங்கள் செய்ய முனைகிறது திருக்குறள். பெண்ணுக்கான காம நுகர்வு கண்டிக்கப்படுகிறது. ஆணுக்கான காம நுகர்வு சில கட்டுபாடுகளுடன், சுதந்திரமாக்கப்பட்டு இருப்பதை திருக்குறள் அப்பட்டமாக்குகிறது. ஆணாதிக்க மனோபவத்தில் திருக்குறள் பதிவாகி இருப்பதைக் காணலாம். பெண்ணுக்கான பாலியல் சுதந்திரத்தை திருக்குறள் வெளிப்படுத்தவில்லை. எனவே, ஆணாதிக்க வாதமாகவே திருக்ளை நோக்க நேர்கிறது. இத்தகைய வாதங்களையே இக்கட்டுரை விவாதிக்க முற்படுகிறது.*

*கருச் சொற்கள்:- திருக்குறள், பரத்தை, ஆணாதிக்கம், காம நுகர்வு ,பெண்ணிய பாலியல் சுரண்டல், ஆண் பாலியல் சுதந்திரம்.*

## *முன்னுரை*

*திருக்குறள் இயற்கை நெறிக்கால வாழ்க்கை முறையை கண்டனம் செய்ய எழுந்த நூலாக கொள்ளலாம். இயற்கை நெறிக்கால இலக்கியங்களிலிருந்து அக்கால வாழ்க்கை முறையை வகுத்தல், அவ்வாழ்வியலை குறை கூறுவது போல திருக்குறள் அமைந்துள்ளது. வரைவின் மகளிர், பெண்வழிச் சேரல், பிறனில் விழையாமை என்னும் அதிகாரங்களில் காமம் கடிந்து ஒதுக்கப்படுவதைக் காணலாம். இயற்கை நெறிக் கால வாழ்க்கை முறையில் வேறு சில அம்சங்களும் திருக்குறளில் கண்டிக்கப்படுகின்றன.*

*திருக்குறளில் பரத்தமையிடம் ஆண் செல்வது கண்டிக்கப்படுகிறது. பெண்களில் சிலரை காம கழிவிடங்களாக மாற்றும் பரத்தையர் பிரிவை கூற முடிந்த வள்ளுவர், ஏன் எங்கும் பெண்ணடிமைத்தனத்தை கண்டிக்கவே இல்லை? மேலும் பரத்தையர் பிரிவை தவிர்ப்பதற்கான காரணம் என்ன? பரத்தமையை உருவாக்க காரணமாக ஆணாதிக்கச் சமூகத்தை அவர் எங்கும் சாடவில்லை. திருக்குறளை நோக்கினால் அனைத்தும் ஆணையே மிகப்படுத்தி உள்ளது விளங்கும். பெண்ணுக்காக பரிந்து பேசாத வள்ளுவர் எப்படி பரத்தையர் வாழ்வை மட்டும் கண்டித்திருக்க முடியும்.*

*இதை ஆணாதிக்க வாதமாக கொள்ள வேண்டி இருக்கிறது. பரத்தையர் உருவாவதை கண்டிக்கவில்லை. பரத்தையிடம் ஆண் செல்வதைத்தான் இழிவுபடுத்திப் பேசுகிறார். பரத்தையர் ஒழுக்கத்தை கண்டிப்பது /மறுப்பது என்றால், அதற்கான ஒரு அதிகாரத்தை வகுத்து, அதில் பரத்தை தோன்றுவதற்கான காரணத்தையும், பரத்தை ஒழுக்கத்தையும் கண்டிருக்கலாம். ஆனால் பரத்தையர் பிரிவு பற்றி வள்ளுவர் பேசவே இல்லை என்பதை சமூகம் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கிறது. இத்தகைய வாதங்களை இக்கட்டுரை ஆராய்கிறது.*

## *பரத்தை சொல்லாட்சி*

*திருவள்ளுவர் பரத்தையர் பிரிவை கூறவில்லை. பரத்தை என்ற சொல்லுக்கு பதிலாக வேறான சொல்லாட்சியை பயன்படுத்தியுள்ளார். திருவள்ளுவர் பரத்தமையைக் கூறும் மருதத் திணையை புறக்கணித்து இருப்பதால் அவர் அதற்கு எதிரானவர் என்பதை உணரலாம். அதன்*

*முறையே "வள்ளுவர் பரத்தையர் பிரிவு கூறவில்லை. சங்கப்பாடல்களில் பரத்தையர் பிரிவு ஒன்று இருக்கக் காண்கிறோம். இந்த நிலையினை ஏற்றுக் கொள்ளாதவர்" என்பதனைக் குறளின் கற்பியல் காட்டுகின்றன. (ந.வள்ளியம்மாள்; தமிழ் இலக்கியங்களில் அகப்பொருள் கொள்கைகள்; 1980 : 75) தொல் மரபுகள் கூறிவந்த சமூக மரபு என்பது, தோழி, தலைவி ஆகிய அகநிலைப் பாத்திரங்களின் வாயிலாக பரத்தை ஒழுக்கம் கண்டிக்கப்பட்டு வந்திருப்பதை அறிய முடிகிறது. ஆனால், வள்ளுவர் பரத்தை நிலைப்பாட்டையே பேசாமல் தவிர்ப்பது சமூக பிரதிபலிப்பாக தென்படவில்லை.*

*சமூகத்தில் அதிகரிக்கும் தீமைகளை கண்டிக்கவே, புது விதிகள், நீதிகள் வகுக்கப்படுகின்றன. இது காலந்தோறும் இலக்கிய, இலக்கணங்கள் வழி நடந்தேறி வருவதே சமூக எதார்த்தம். இதன் நீட்சியாகவே வள்ளுவரின் கருத்து மறுப்பை காணலாம். மேலும் பரத்தையருக்கான சொல்லாட்சியை இவ்வாறு முன்வைக்கிறார். பரத்தமையில் ஈடுபடும் பெண்ணைப் "பண்பில் மகளிர்", "பொருட்பெண்டிர்", "புன்னலம் பாரிப்பார்", "மாய மகளிர்", "இருமணப் பெண்டிர்", "பொருள் விழையும் ஆய்தொடியார்" என பலவாறு இகழ்ந்து உரைக்கிறார். (பா.வீரமணி: குரல் கிளத்தும் சிந்தனைகள்: 2014:51) இத்தகைய சொல்லாட்சி வேறுபட்டு இருப்பினும், இப்பெயருக்கான இழிநிலை என்பது ஒன்றேயாகும். ஆண் உயர்வு பெண் தாழ்வு என்பது தான் நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் அடிப்படை பார்வை. பெண் ஆணுக்கு அடிமை, உடைமை என்பது தான் இந்த சமுதாயத்தின் ஊளுத்துப்போன பிற்போக்கான பார்வை. இந்தப் பார்வையை ஒட்டிய கருத்துக்கள் திருக்குறளில் அங்குமிங்கும் நிழலாடுவதை காணமுடிகிறது.*

*பரத்தையர் உருவாக்கத்தின் சமூகப் பின்னணி*

*பரத்தை உருவாக்கத்தில் சமூகத்தின் பங்கு தவிர்ப்பதற்கு இல்லை. ஆணாதிக்கச் சமூகம் தன் தேவைக்காக உருவாக்கப்பட்டதே பரத்தை மரபு. மேலும், பல சூழ்நிலை காரணமாக பரத்தை தோற்றம் நிகழ்ந்துள்ளதை பின்வரும் கருத்தின் வழி அறியலாம். "வள்ளுவர் பெரும்பாலும் பிறன் மனைவியை மட்டும் ஏன் குறிப்பிட வேண்டும்? இந்த கேள்வியை புறந்தள்ளிவிட முடியாது. அக்காலத்தில் மன்னர்களும், போர் வீரர்களும் பகை நாட்டை வென்றபோது இறந்த போர் வீரர்களின், மன்னர்களின் மனைவிமார்களை கவர்ந்து வரும் பழக்கம் மிகுதியாக இருந்துள்ளது. மற்றும் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்த கணவன் திரும்புவதற்கு பல ஆண்டுகள் ஆகி இருக்கக் கூடும் இதனால் பிறன் மனைவியை நாடும் பழக்கம் மிகுதியாக இருந்திருக்கலாம். இவை போன்ற காரணங்களால் வள்ளுவரும் பெரிதும் பிறனில் விழையாமையைப் பேசியிருக்கக்கூடும்''. (பா.வீரமணி; குறள் கிளத்தும் சிந்தனைகள்; 2014: 54) இத்தகைய கூற்றில் வழி அறிவது, போர் முடிவுகளும், தலைவன் நீண்ட நாள் பொருளீட்டச் செல்லுதலும் பரத்தை தோன்ற முக்கிய காரணங்களாக இருப்பதை உணர்த்துகிறது.*

*வள்ளுவர் வாழ்ந்த சமூகச் சூழல் என்பது பரத்தையர் மறுப்புக்கு காரணமாக இருந்திருக்கலாம். புலால் மறுப்பு காரணங்களான யாகம், வேள்விகள், இயற்கை சீற்றத்தின் வாயிலாகவும் கால்நடைகள் பெரும்பங்கு அழிக்கப்பட்டுள்ளன. இதனால் கால்நடைகளை நம்பியிருந்த பயிர்த் தொழில்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இத்தகைய காலச் சூழலில் கால்நடைகளை பாதுகாக்க வேண்டிய அவசியமே, வள்ளுவருக்கு புலால் மறுப்பை சமூகத்தில் நிலைநாட்ட வேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியுள்ளது.*

*தொல் மரபின் வழியான பரத்தை பரவல் என்பது அதிகரித்து வந்த சூழலில் அதனை கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தின் அடிப்படையில் பரத்தை மறுப்பை வள்ளுவர் மேற்கொண்டு உள்ளதை அறியலாம். வள்ளுவர் வாழ்ந்த காலச் சமூகம் என்பது போரில் வெற்றிபெற்ற குறுநில தலைவர்கள், அரசர்கள் பொன் பொருளோடு, பெண்களையும் கவர்ந்து வந்திருக்கின்றனர் என்பதை வரலாறு காட்டுகிறது. அத்தகைய பெண்கள் ஆண்களின் காமக் கழிவிடங்களாக பயன்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், தொல்காப்பியமும், சங்க இலக்கியமும் பெண் பூப்பெய்த காலத்திலும், புதல்வர் பிறந்த காலத்திலும் தலைவன் பரத்தையை நாடிச் செல்லலாம் என்ற தாராள அனுமதிகளும் பரத்தையர் தோன்ற காரணமாக இருந்திருக்கலாம். எனவே, இத்தகைய பரத்தையர் அதிகரிப்பை தடுக்கவே வள்ளுவர் பரத்தைப் பிரிவை பேசாமல் தவிர்த்திருக்கலாம்.*

*தொல்காப்பியம் காட்டும் பரத்தை*

*தொல்காப்பிய இலக்கண நூல் பரத்தமை வாழ்விற்கு இலக்கணம் வகுத்துள்ளது. கற்பியல் பிரிவில் தலைவி கூறும் கூற்றுகளாக பின்வருவனவற்றைக் காணலாம்.*

*" மாயப் பரத்தை உள்ளிய வழியும்*
*தன் வயின் சிறைப்பினும், அவன் வயின் பிரிப்பினும்*
*இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்*
*காமக்கிழத்தியர் நலம் பாராட்டிய" (தொல். பொருள். கற்பியல்:1093)*

*இக்கூற்று வெளிப்படுத்துவது "சூள்" காலத்தில் தலைவன் பரத்தையர் பால் செல்லும் இயல்பைப் புலப்படுத்துவதாகும். "புதல்வன் பிறந்த பின், நெய்யணி ஆடல் முடிந்து வீட்டிற்கு அழைக்கும் பொழுது, அப்பொழுது வந்து நயந்த கணவனை மனம் நோகும்படி செய்து, பக்கத்தில் வராமல் தடுத்த இளிவரல் நிலை, புதிய பெண்களின் அழகை நாடிச் சென்று வந்தவனிடம், தன் துன்பத்தை வெளிக்காட்டி, அன்பால் அவனோடு போன நெஞ்சை அடக்கி, எதிரேற்றுப் பின், மறுத்தபோது பரத்தையரிடம் தங்கி வந்த தலைவனை வணங்கி, எம் தங்கையருக்கு(பரத்தையர்க்கு) நீ பணிந்து பேசும் இம்மொழிகளை உரைப்பாயாக என நகையாடுதல், பரத்தையர் பால் செல்லாத காலத்திலும் தலைவனை அங்கு போ என்று ஊடிச் செல்லுதல்". (தமிழண்ணல், தொல்காப்பியம்; 2017: 369) இக் கூற்று தலைவி தலைவனின் பரத்தை ஒழுக்கத்தை இயல்பாக ஏற்பதையே காட்டுகிறது.*

*பரத்தையிடம் சென்று திரும்பி வரும் தலைவன், தலைவி ஊடும்போது ஊடல் தவிர்க்குமாறு இரந்து கெஞ்சி கேட்பதுண்டு. இனி அவ்வாறு நாடேன் என சூளுரைத்து நம்பிக்கையூட்டுவது உண்டு. இவை யாவும் தலைவன் தனது பலவகைப்பட்ட பிரிவுகளில் நிகழ்த்தும் கூற்றுகள் ஆகும்.*

*பரத்தை பிரிவுக்குரிய காலம்*

*" பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்*
*நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்*
*பரத்தையிற் பிரிந்த காலையான" ( தொல். பொருள்; 1133)*

*தலைவி மாத பூப்படையும் காலத்திற்கு பின் வரும் பன்னிரண்டு நாளும், தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையரை நாடிச் செல்ல மாட்டான். ஏனெனில் அது கரு உருவாகும் காலம் என்பர் உரையாசிரியர். எனவே மீதமுள்ள நாட்களில் பரத்தையரிடம் தலைவன் செல்வதற்கான முகாந்திரம் தாராளமாக்கப்படுவதைக் காட்டுகிறது.*

*பரத்தமை ஒழுக்கம்*

*"பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே*
*நிலத் திரிபு இன்று அஃது என்மனார் புலவர்" (தொல்.பொருள். 1169)*

*பரத்தை ஒழுக்கம் மருத நிலத்திற்கு மட்டுமன்று, நான்கு நிலத்தவர்க்கும் உண்டு. பாலை என்பது இவ்வாறு நான்கு நிலத்தவர்க்கும் பொதுவாயினும் முல்லை குறிஞ்சி திரிந்த பாலை என நிலத்திரிபு உண்டு. ஆனால் பரத்தமைப் பாடல்கள் உரிப்பொருளின்படி மருதத்திற்கே உரியன. இதில் நிலத்திரிபு இல்லை.*

*பரத்தையைப் பாராட்டும் தலைவி*

*"கற்பு வழிப் பட்டவள் பரத்தையை ஏத்தினும்*
*உள்ளத்து ஊடல் உண்டென மொழிப" (தொல்.பொருள்.1178)*

*கற்பு வெளிப்பட்ட மனைவி, பரத்தையைச் சிலசமயம் உயர்த்தி புகழ்ந்து பேசுவதும் உண்டு. அதற்குக் காரணம் அவளுடைய உள்ளத்தில் இருக்கும் ஊடலே காரணமாகும். பரத்தை ஒழுக்கத்தை தலைவி ஊடித் தடுத்தாலும் இறுதியில் பரத்தை ஒழுக்கத்தை தலைவி இயல்பாக ஏற்றதாகவே தொல்மரபுகள் காட்டுகின்றன.*

*பரத்தையைப் புகழ்ந்து பேசுவது போல பழித்துப் பேசுதல் தலைவிக்குரிய இயல்பாக அமைகிறது. பரத்தைக்காகவும் தலைவனை ஊடுவாள் என்பது வியப்பாகவும் தலைவியின் விட்டுக்கொடுக்கும் தன்மையையும் புலப்படுத்துகிறது. சில இடங்களில் தலைவி பரத்தையின்*

மீது கோபம் கொள்ளாமல் அவளும் தலைவன் பிரிவின் பொருட்டு துன்பப்படுவதையும் சில இடங்களில் காண முடிகிறது.

சங்க இலக்கியப் பரத்தை

தொல்காப்பிய நெறியைப் பின்பற்றியே சங்க இலக்கியக் கால பரத்தை பயணிப்பதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் மருதத்திணைப் பாடல்கள் பெரிதும் பரத்தமையைப் பற்றியே பேசுகின்றன. அகநானூற்றின்-146 ஆவது பாடல் பரத்தையர் ஒழுக்கத்தை கண்டிக்கும் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. ஒரு தலைவன் பரத்தையின் பால் சென்று ஒழுகுதலால் தலைவி ஊடி இருக்கிறாள். அவள் ஊடல் தீர்க்கும் பொருட்டுப் பாணனை தலைவன் அனுப்புகிறான். அப்பாணன் தலைவியின் பால் வந்து தலைவன் தவறிலன் என்று வாயில் வேண்டினான். அது கேட்ட தலைவி, தலைவனின் ஒழுக்கத்தை உவமமாகக் கூறி மறுத்து விடும் அவள் அக உணர்வினைப் புலப்படுத்தும் பாடல்.

"வலிமிகு முன்பி ணண்ண லேஎறு
பனி மலர்ப் பொய்கை பகல்செல மறுகி
மடக்க ணெருமை மாணாகு தழீஇய்
படப்பை நண்ணிப் பழனத் தங்குங்
கலிமகி மூரன்...'' (அகம்-146)

வலிமை மிக்க தலைமைப் பண்பினையும் உடல் வலிமையையும் உடைய எருமைக் கடாவானது குளிர்ந்த மலர்களையுடைய நீர்நிலையின் கண்ணே வீழ்ந்து பகற்பொழுது முழுவதும் கழியுந் துணையும் அந்நீரிலே சுழன்று பின்னர் மாட்சியுடைய இளைய எருமையினைத் தொடர்ந்து போய் ஊர்ப் பொது நிலத்தில் தங்கும், என இயற்கை வருணனையாகக் கூறப்படும் இக்காட்சி 'தலைவன் பகலெல்லாம் பரத்தையர் இல்லங்களிலேயே தங்கியிருக்கிறான் அத்தகையவனை நீ தவறிலன் என்கிறாயே' என வருந்தி மறுத்துக் கூறும் தலைவியின் அக உணர்வினை புலப்படுத்தும் திறன் வாய்ந்ததாக தலைவி கூற்று அமைந்துள்ளது.

அகநானூற்றின் 216-ஆவது மருதத் திணைப் பாடல் வரிகள் பரத்தைக் கூற்றை இவ்வாறு நிகழ்த்துகிறது. தலைவி தன் மேல் பழி கூறினால் என்று பரத்தை கேள்விப்பட்டாள். அதனைப் பொறுக்க மாட்டாத பரத்தை தலைவியை இகழ்ந்து பேசுவதை தோழி முதலியோர் கேட்குமாறு தான் தன் தோழியர்க்குக் கூறுவது போல் அமைந்துள்ளது. சில நேரங்களில் தலைவனை ஊடாமலும் தலைவியர் தலைவனை சேர்ப்பதை பின்வரும் அகநானூற்றின் 236- வது மருதத் திணைப் பாடல் மூலம் நோக்கலாம். "தலைவன் பரத்தமை ஒழுக்கத்தை மேற்கொண்டான். அதனை அறிந்து ஊடியிருந்த தலைவி தலைவன் இல்லம் வந்தபோது ஊடாது அவனுடன் மகிழ்ந்திருந்தாள். மறுநாள், தலைவன் தலைவியை நீங்கியிருந்த பொழுது அங்குச் சென்ற தோழிக்கு தலைவி முதல் நாள் தான் தலைவனுடன் ஊடாமல் இருந்ததற்கான காரணத்தைக் கூறுவதாகும்". (அ. தட்சிணாமூர்த்தி; அகநானூறு; 2007 : 264) இத்தகைய கூற்றுகள் தலைவி,பரத்தை இடையிலான உறவு நிலையைப் புலப்படுத்துவதாகும்.

புறத்தொழுக்கம்

சங்க காலத்தில் ஆணின் பொருளும் பெண்ணின் மெய்யும் பண்ட மாறுதலைப் பண்டைச் சமூகம் பார்த்துக்கொண்டிருந்துள்ளது. நாற்றுக்கிடையே தோன்றும் களையாகக் கருதாது, வரப்பில் வளரும் பூச்செடி போலப் பரத்தையர்களைக் கருதியதைப் புதுமைப்பெண் நூல் புலப்படுகிறது.

"தம் அழகுமிக்க உடலையும் தந்தொழிவது வழக்காயிற்று. அவருடைய அழகும் பெருமையுமாகிய நலங்களில் கருத்தைச் செலுத்தும் ஆடவர், பெருஞ்செல்வம் தந்து அவரைப் பேணுவதோடு, அவரைத் தமக்கே உரியராக வரைந்து கொண்டு அவரது இன்பத்தை நுகர்ந்துறைவதும் உண்டு. அவ்வாறு வரையப்பட்ட பரத்தையருடன் கூடியொழுகும் தலைமக்கள் ஒழுக்கம் புறத்தொழுக்கம் என்றும், பரத்தையொழுக்கம் என்றும் வழங்கும். தம்மை மணந்து கோடற்கேற்ற ஆடவர் இல்லாமையால், மனமின்றி வாடும் பரத்தையர், மனை வாழ்வில் உறையும் ஆண் மக்கள் உள்ளத்தைத் தம்பால் ஈர்த்து, அவர்க்குத் தமது நலத்தை ஈந்து பொருள் பெற்று வாழ்தலால் அவர் பலரும் சீர்கேடு எய்தாவாறு புரப்பது தலைமகட்குக் கடனாகக் கருதப்பட்டது". (அவ்வை.சு.துரைசாமிப்பிள்ளை; நற்றிணை: 2010 : 772) இக்கூற்றில் பரத்தையரின் வாயிலாக

தலைமகன் நிலைப்பாட்டை உணரமுடிகிறது. பொருள் கொடுத்து பரத்தையரை வாழ வழி செய்வது தலைமக்களின் கடனாக இருப்பதையும் உணர்த்துகிறது. மேலும் சில தலைமகன்கள் பரத்தையரை மணம் முடிந்தும் உள்ளனரே, என்பதின் வழி மேலாய்விற்கும் வழிவகுக்கிறது.

வ.சுப.மாணிக்கனாரின் பரத்தை ஒழுக்கச் சமூகப் புரிதலை பின்வருமாறு நோக்கலாம். "பண்டைத் தமிழ்ச் சமுதாயத்தில் பரத்தையொழுக்கம் ஒருவகை குடும்ப ஒழுக்கம் போலப் பரவிக் கிடந்தது. வரைவின் மகளிர் தம் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உகந்த சூழ்நிலை சமுதாயத்தில் நிலவியிருந்தது. இடையறா இன்ப புணர்வுக்கென்று கணவன்மார்கள் வைப்பு எடுத்துக் கொள்ளும் பழக்கம் சமுதாய மரபு போல் ஊன்றி நின்றது". (பா.வீரமணி: குறள் கிளத்தும் சிந்தனைகள்; 2014 : 56) இத்தகைய கூற்றுகளின் வழி சமூகத்தில் பரத்தைக்கான இடத்தை தெளிவுபடுத்துகிறது. பண்டையத் தமிழ்ச் சமூகம் பரத்தை ஒழுக்கத்தை வாழ்வின் ஒரு அங்கமாகவே பாவித்து உள்ளதை உணர முடிகிறது.

வள்ளுவர் நெறியில்– பரத்தை

வள்ளுவர் பரத்தையர் பிரிவை பேசவில்லை. ஆனால், பண்டைய நெறியில் நின்று பரத்தை ஒழுக்கத்தைச் சாடுகிறார். வள்ளுவரின் காலச்சூழலில் பரத்தையர் உருவாவதை கண்டிக்க வேண்டிய சூழலாக இருந்திருக்கிறது. ''பெண்களைப் பரத்தையர்களாக ஆக்குகின்ற வரைவின் மகளிரைப் பேசி காப்பாற்றுகிற சமுதாயத்தையோ, ஆடவர்களையோ இந்த கேட்டுக்கு மூல காரணமாக்கி வள்ளுவன் பேசுகின்றனா? என்று கேட்டால் 'இல்லை' என்றே நான் விடை அளிக்கவேண்டும்". (ப.வீரமணி; குறள் கிளத்தும் சிந்தனைகள்; 2014 : 54) என்பதை ஜீவாவின் கூற்றாக வெளிப்படுவதைக் காணலாம். இந்தக் கூற்றின் வழி அறிவது வரைவின் மகளிர்களே பிற்கால பரத்தையர் என்பதைப் புலப்படுத்துவதாகும். பிறப்பின் வழியான பரத்தையர் என்பதைக் காட்டிலும், சமூகச் சூழலின் வழியான வரைவின் பரத்தையர் தோன்றலே சமூகத்தில் அதிகம் நிலை இருக்கிறது என்பதை ஊகிக்கலாம்.

திருக்குறளின் காமத்துப்பாலில் வரும் " புலவி நுணுக்கம்" என்னும் அதிகாரத்தை நோக்கலாம்.

"பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு" (குறள் ; 1311)

இக்குறளின் பொருள் முறையே, "பரத்தமை உடையாய்! நின்னைப் பெண்தன்மை உடையார் எல்லோரும் தம் கண்களால் பொதுவாக நுகர்வதால், அவர்கள் உண்ட நின் மார்பினை நான் தீண்ட மாட்டேன்" என்று தலைவி பொய்யுரை கூறுவதை தொல் மரபின் வழி வள்ளுவர் நிற்பதை காட்டுகிறது.

தீ நட்பு

"உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்" (குறள்-813)

இக்குறளுக்கான பொருள் முறையே, "தமக்குக் கிடைக்கும் பயனை அளந்து பார்க்கும் நண்பரும், உள்ளன்பை விரும்பாது தமக்குக் கிடைக்கும் பொருளை மட்டும் காதலிக்கும் விலைமகளிரும், பிறரைச் சோர்வு பார்த்து அவருடைய பொருளைப் பறிக்கும் கள்வரும் தம்முள் சமம் ஆவார்கள்". (ப.முருகன் ; திருக்குறள் : 2007:166) இக்குறளின் வழி பரத்தையரை கள்வருக்கு ஒப்பாக்கி தரம் தாழ்த்திப் பார்ப்பதைப் புலப்படுத்துகிறது. இங்கே பரத்தை உறவு கூடாது என்ற கண்டிப்புடன் வள்ளுவர் பரிந்துரைப்பதைக் காணமுடிகிறது.

கூடாநட்பு

" இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்" (குறள் : 822)

இக்குறள் பொருள் முறையே, "தம்மைச் சார்ந்த இனத்தாரைப் போலவே புறத்தே நடித்து உள்ளத்தால் தம்மனத்தைச் சேராத உள்ளன்பு இல்லாதவர் நட்பு, பொது மகளிரின் மனம்போல உள்ளொன்றும் புறம் ஒன்றுமாக வேறுபடும்". (மேற்படி : 168) இக்குறளின் வழி பொது மகளிரின் மனநிலை வெளிப்படுகிறது. பரத்தையரின் பொருளுக்கான பொய்யான அன்பு என்பதை வெளிப்படுத்துகிறது.

வரைவின் மகளிர்

" பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று" (குறள் : 913)

இக்குறள் பொருள் முறையே, "பணத்தையே பொருளாகக் கொண்ட விலை மகளிரின் புல்லிய நலத்தை அருளைப் பொருளாகக் கொண்டு ஆராய்ந்து பார்க்கும் அறிவினை உடையோர் பொருந்தார்". (மேற்படி :186) இருட்டறையில் பிணத்துடன் உறவு கொள்வதைப் போன்றதாக பரத்தையுடன் கூடுதலைக் கண்டிக்கிறார். பெருகிக் கிடந்த பரத்தை முறையை சமூகத்தில் இருந்து அகற்ற வள்ளுவர் பரத்தைப் பிரிவை தெரிந்தே தவிர்த்து இருக்கலாம்.

சமூகத்தின் அங்கமான பரத்தை

தொல் மரபு காலங்களில் சமூகத்தில் தவிர்க்க முடியாத இடத்தை பரத்தை பெற்றிருந்தாள். பரத்தை ஒழுக்கம் சமூக விதியான காலம் அது. இதன் முறையே, "வள்ளுவர் காலத்துக்கு முற்பட்ட சங்க காலத் தமிழர், பரத்தமையைச் சமுதாயத்திற்குத் தேவையான ஒன்று என்றெண்ணி வாழ்ந்து வந்தனர். அக்காலத்தில் பெரும்பாலோர்க்குப் பரத்தையர் தொடர்பு இருந்துள்ளது. பலருக்கு இல்லக்கிழத்தியுடன், காமக்கிழத்தி, பரத்தை ஆகியோரோடு பாலியல் தொடர்பு இருந்துள்ளது. சங்க இலக்கியங்களில் மருதத்திணை பாடல்கள் பெரிதும் பரத்தமையைப் பற்றியே பேசுகின்றன. தொல்காப்பியர் காலத்திலேயே பரத்தையர் பிரிவு ஒரு சமுதாய விதியாகவே இருந்துள்ளது". (பா.வீரமணி, குறள் கிளத்தும் சிந்தனைகள் ; 2014 : 56) இக்கூற்றின் வழி பரத்தை நிலைப்பாட்டை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும், பொதுமகளிர் என்ற சொல்லாட்சி இல்லக்கிழத்தி, காமக்கிழத்தி வழியே உருவாகின்ற பரத்தையரை குறிப்பதாகும். எனவே, பொதுமகளிர் என்பது இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் பெண்கள், வேறு ஆண்களுடன் தொடர்பு வைப்பதைக் குறிக்கின்றதோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகிறது.

தொல் மரபை புறக்கணித்தல்

பரத்தையரால் சமூகம் சிதைக்கப்படுவதை அறிந்த வள்ளுவர் பரத்தைப் பிரிவை கூறாது தவிர்த்திருக்கலாம். இதன் முறையே, ''பண்டையக் காலத்தில் மட்டுமன்றி, நம் காலத்தில் தாய்லாந்து, இந்தோனேசியா, ஜப்பான், பிரேசில் போன்ற நாடுகளில் பரத்தமை ஒரு தேசியத் தொழிலாக வளர்ந்து உள்ளதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். சங்க காலத்திலும், வள்ளுவர் காலத்திலும் இத்தொழில் இயல்பானதாகவே சமுதாயத்தில் இருந்துள்ளது. வள்ளுவரோ அதனை இயல்பானதாக ஏற்கவில்லை. காமத்துப்பாலில் பரத்தமையைக் கூற இடமிருந்தும், அவர் அதற்கு இடமளிக்கவில்லை. மருதத் திணைக்கு முன்னோர் கூறிய இலக்கணத்தைப் புறக்கணித்துள்ளார் வள்ளுவர். திருக்குறளில் மருதத்திணைக் குறித்த புலவி, புலவி நுணுக்கம், ஊடலுவகை ஆகிய அதிகாரங்களில் பரத்தமை பற்றி கூறுவதற்கு பெரிதும் இடம் இருப்பினும், அதற்கு அவர் இடமளிக்கவில்லை, மற்றும் பிரிவாற்றாமை என்னும் அதிகாரத்தில் பிரிவை உணர்த்தும் வகையில் உள்ள வேறு அதிகாரங்களிலோ பரத்தையர் பிரிவை அவர் கூறினார் அல்லர்". (பா. வீரமணி, குறள் கிளத்தும் சிந்தனைகள் ; 2014 : 57) பரத்தையர் பிரிவை வள்ளுவர் தெரிந்தே கூறாது தவிர்த்திருக்கிறார் என்பதை இத்தகைய கூற்றுகளின் வழி அறிய முடிகிறது.

முடிவுரை

சமகால சூழலில் கூட பரத்தையரிடம் செல்வதை ஆண் அவமானமாக கருதும் நிலை இன்றும் நிலவுகிறது. இதற்கு முக்கிய காரணம் வள்ளுவர் அன்றே வகுத்த பரத்தையர் கண்டிப்பே காரணம். தொல் மரபுகளில் இயல்பாக இருந்த பரத்தை ஒழுக்கம், வள்ளுவர் காலத்தில் இழிவாக மாற்றம் பெற்றுள்ளது. அறக்கருத்துகளின் வழியான பரத்தைக் கண்டிப்பு பிரச்சாரத்தை வள்ளுவர் அன்றே தொடங்கியுள்ளார். இக்கருத்துகள் சிறிது, சிறிதாக வேரூன்றி வலுப்பெற்று நிற்பதற்கு வள்ளுவரே காரணமாகிறார்.

துணைநூற்பட்டியல்

1) தமிழண்ணல், தொல்காப்பியம், மீனாட்சி புத்தக நிலையம்,மதுரை-1, பதிப்பு -2017
2) மு. வரதராசனார், திருக்குறள், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை- 18, பதிப்பு -1994.

*3) பா. முருகன், திருக்குறள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை- 98,பதிப்பு - 2001.*

*4) ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, நற்றிணை, பூம்புகார் பதிப்பகம், சென்னை - 108, பதிப்பு 2010.*

*5) நா. வள்ளியம்மாள், தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் கொள்கைகள், மக்கள் வெளியீடு, சென்னை - 2, பதிப்பு- 1980.*

*6) பா. வீரமணி, குறள் கிளத்தும் சிந்தனைகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 108,பதிப்பு - 2014.*

*7) பெ. மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமூதாயம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை - 98, பதிப்பு - 2010.*

*8) ஆ . வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், குமரன் புத்தக இல்லம், சென்னை, பதிப்பு - 2010.*

********* ********* ********** ********* ********* ********** ********** **********